இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 21-08-2025

# தேர்தல் ஆணையரை மாற்றுங்கள்!

தேர்தல்களை பொறுப்பாக நடத்த வேண்டிய தேர்தல் ஆணையர், அது குறித்த கேள்விகளைக் கேட்டால் பொறுப்பற்ற முறையில் பதில்களைச் சொல்லிக் கொண்டிருக்கிறார். தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமாரை பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்று 'இந்தியா' கூட்டணிக் கட்சிகள் சொல்வதைத்தான் உடனடியாகச் செய்ய வேண்டும்.

**பீகார் மாநிலத்தில் 65 லட்சம் வாக்காளர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டுள்ளது. கர்நாடக மாநிலத்தில் ஒரே ஒரு தொகுதியை மட்டும் எடுத்து வைத்து அங்கு வாக்குத் திருட்டு எப்படி நடந்துள்ளது என்பதை காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி அவர்கள் அம்பலப்படுத்தி இருக்கிறார்கள். இவை இரண்டுக்கும் தானாக முன் வந்து பதில் அளித்திருக்க வேண்டும் தேர்தல் ஆணையம். மாறாக பொய்சமாளிப்பு பதில்களைத் தான் சொல்லி வருகிறது தேர்தல் ஆணையம்.**

"வாக்குத் திருட்டு குற்றச்சாட்டு தொடர்பாக மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி ஏழு நாட்களுக்குள் தனது கையெழுத்துடன் உறுதிமொழிப் பத்திரம் தாக்கல் செய்ய வேண்டும். தவறினால், அக்குற்றச்சாட்டுகள் அடிப்படையற்றவை என்று உறுதி செய்யப்படும். அதற்காக நாட்டு மக்களிடம் அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும்" என்று தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் சொல்லி இருக்கிறார். இது தலைமைத் தேர்தல் ஆணையரின் பொறுப்பான பதில் அல்ல. ராகுல் காந்திக்கு விடுக்கப்பட்ட அப்பட்டமான மிரட்டல் ஆகும். இந்த அதிகாரத்தை அவருக்கு கொடுத்தது யார்? எந்த தைரியத்தில் அவர் இப்படி பேசுகிறார்?

நாடாளுமன்ற உறுப்பினராக பதவிப் பிரமாணம் எடுத்த பிறகு உறுப்பினர் ஒருவர் சொல்லும் ஒவ்வொரு சொல்லுக்கும் பொறுப்பேற்க வேண்டியது அவரது கடமை ஆகும். இதனை உணர்ந்தவர்தான் ராகுல் காந்தி அவர்கள். பொத்தாம் பொதுவாக, 'இப்படி எல்லாம் நடக்கிறது' என்று அவர் பேசவில்லை. 'இப்படித்தான் அந்தத் தொகுதியில் நடந்திருக்கிறது' என்பதை தேர்தல் ஆணையத்தின் ஆவணங்களைக் கையில் வைத்துக் கொண்டு சொல்லி இருக்கிறார் ராகுல் காந்தி. இதற்கு மேல் என்ன உறுதிமொழிப் பத்திரத்தை எதிர்பார்க்கிறார் தலைமைத் தேர்தல் ஆணையர்?

**வாக்களிக்கும் உரிமை என்பது இந்திய அரசமைப்புச் சட்டம், இந்திய நாட்டு மக்களுக்கு வழங்கியுள்ள உரிமை ஆகும். அந்த உரிமையைப் பாதுகாக்கும் கடமை, தேர்தல் ஆணையத்துக்குத்தான் உண்டு. அந்த உரிமையை உறுதி செய்ய வேண்டியது தேர்தல் ஆணையத்தின் வேலை ஆகும். அந்த உரிமை தொடர்பாக கேள்வி எழுப்பும் உரிமை எதிர்க்கட்சிகளுக்கு உண்டு. பதில் சொல்லும் கடமை தேர்தல் ஆணையத்துக்குக் கிடையாதா?**

**தனது பொறுப்பை தட்டிக் கழிக்கும் வகையில்தான் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமாரின் பேட்டி அமைந்துள்ளது. அவர் தலைமைத் தேர்தல் ஆணையராகச் செயல்படவில்லை. பா.ஜ.க.வின் செய்தித் தொடர்பாளராகவே மாறிவிட்டார். இந்த ஞானேஷ்குமாரிடம் இதைத் தவிர வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால் இந்த ஞானேஷ்குமார், ஒன்றிய உள்துறை அமைச்சகத்தில் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக பணியாற்றியவர். உள்துறை அமைச்சர் அமித்ஷாவுக்கு நெருக்கமானவர். அதனால்தான் தேர்தல் ஆணையர் ஆனார். பின்னர் தலைமைத் தேர்தல் ஆணையராகவே கடந்த பிப்ரவரி மாதம் ஆக்கப்பட்டார்.**

**ஞானேஷ்குமார் நியமனத்தை 'பண்பற்ற நியமனம்' என்று அப்போதே கண்டித்தார் ராகுல் காந்தி. "புதிய தலைமைத் தேர்தல் ஆணையர் நியமன நடைமுறை தொடர்பான வழக்கு உச்சநீதிமன்றத்தில் 48 மணி நேரத்துக்குள் விசாரணைக்கு வர உள்ள நிலையில், அந்தப் பதவிக்குப் புதியவரைத் தேர்ந்தெடுத்து பிரதமர் மோடியும், அமைச்சர் அமித்ஷாவும் மேற்கொண்ட முடிவு பண்பற்ற நடவடிக்கை" என்று குற்றம் சாட்டி இருந்தார் ராகுல் காந்தி. " புதிய தலைமைத் தேர்தல் ஆணையர் தேர்வுக் குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதியை நீக்கி தேர்தல் நடைமுறையின் நேர்மை குறித்த கோடிக்கணக்கான வாக்காளர்களின் கவலையை மோடி அரசு அதிகப்படுத்தி உள்ளது" என்றும் ராகுல் சொல்லி இருந்தார்.**

புதிய தலைமைத் தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுக்க டெல்லியில் அதற்கான கூட்டம் நடைபெற்றது. பிரதமர் மோடி இருந்தார். மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் என்ற வகையில் ராகுல்காந்தி பங்கெடுத்தார். அமைச்சர் என்ற வகையில் அமித்ஷா இருந்தார். பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர் உச்சநீதிமன்ற நீதிபதி ஆகியோரால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற விதியை கடந்த முறையே மாற்றிவிட்டது பா.ஜ.க. அரசு. இதனை அந்தக் கூட்டத்தில் சுட்டிக் காட்டி பேசினார் ராகுல்காந்தி. "புதிய தலைமைத் தேர்தல் ஆணையரைத் தேர்ந்தெடுக்கும் குழுவில் இருந்து உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி நீக்கப்பட்டதற்கு எதிரான வழக்கு உச்சநீதிமன்றத்தில் பிப்ரவரி 19 ஆம் தேதி வர இருக்கிறது. எனவே புதிய தலைமைத் தேர்தல் ஆணையர் நியமனத்தை ஒத்தி வைக்க வேண்டும்" என்று வாதிட்டார்.

இதனை ஏற்றுக் கொள்ளவில்லை பா.ஜ.க. அரசு. உச்சநீதிமன்ற நீதிபதி இக்குழுவில் இடம் பெற்றால் தாங்கள் நினைப்பவரை நியமித்துக் கொள்ள முடியாது என்று நினைத்தார்கள். எனவே, பிப்ரவரி 17 ஆம் தேதி நள்ளிரவே ஞானேஷ்குமாரை, தலைமைத் தேர்தல் ஆணையராக நியமித்து விட்டார்கள். இப்படி நியமிக்கப்பட்டவர்தான் இந்த ஞானேஷ்குமார். இவர், பா.ஜ.க.வுக்கு விசுவாசமாகத் தானே இருப்பார்?

"பிரதமர், மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி ஆகியோர் அடங்கிய குழுவின் அறிவுறுத்தலின்படி, தேர்தல் ஆணையர்கள், தலைமைத் தேர்தல் ஆணையர் ஆகியோரை குடியரசுத் தலைவர் நியமனம் செய்ய வேண்டும்." என்று உச்சநீதிமன்ற அரசியல் சாசன அமர்வு 2023 ஆம் ஆண்டு தீர்ப்பு கூறியது. அதை மீறி நியமிக்கப்பட்டவர்தான் இந்த ஞானேஷ்குமார். இத்தகையவர் பா.ஜ.க. சொல்லுக்குக் கட்டுப்பட்டவராகத் தானே இருப்பார்?

'வாக்குத் திருட்டு நடந்துள்ளது, அதைக் கண்டுபிடியுங்கள்' என்று இவரிடம் போய் சொன்னால் நீதி கிடைக்குமா? ஞானேஷ்குமாரை மாற்ற வேண்டும். அதன்பிறகுதான் மற்ற புகார்களை விசாரித்தால் உரிய விளக்கம் கிடைக்கும்.

---

**எதிர்க்கட்சியினரைப் பழிவாங்க ஒன்றிய பா.ஜ.க. அரசு பதவிப் பறிப்பு மசோதாவைக் கொண்டுவந்துள்ளது!**

# இந்தியாவை சர்வாதிகார நாடாக மாற்ற முயலுவதா?

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!

**சென்னை, ஆக. 21 -**

**"எதிர்க்கட்சியினரைப் பழிவாங்க ஒன்றிய பா.ஜ.க. அரசு பதவிப் பறிப்பு மசோதாவைக் கொண்டுவந்துள்ளது! இந்தியாவை சர்வாதிகார நாடாக மாற்ற முயலுவதா?" என முதலமைச்சர் - கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதள பதிவு வருமாறு:

130ஆவது அரசியல் சட்டத் திருத்தம் என்பது சீர்திருத்தம் அல்ல, இது ஒரு கருப்பு நாள், இது ஒரு கொடுஞ்சட்டம்!

30 நாள் கைது = மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலமைச்சரை எந்த விசாரணையும், நீதிமன்றத் தண்டிப்பும் இல்லாமலேயே பதவிநீக்கம் செய்யலாம். பா.ஜ.க. வைத்தது தான் சட்டம்!

வாக்குகளைத் திருடு, எதிராளிகளின் குரலை நசுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுகளை ஒடுக்கு: எல்லா கொடுங்கோன்மையும் இப்படித்தான் தொடங்கும்!

மக்களாட்சியின் வேரிலேயே வெந்நீர் ஊற்றும் இத்தகைய திருத்தச் சட்டத்தை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்தியாவைச் சர்வாதிகார நாடாக மாற்ற முயலும் இந்த முயற்சிக்கு எதிராக ஜனநாயகச் சக்திகள் அனைவரும் ஒன்றிணைந்து போராட முன்வர அழைக்கிறேன்.

பிரதமருக்குக் கீழான சர்வாதிகார நாடாக இந்தியாவை மாற்றுவதன் மூலம் ஒன்றிய பா.ஜ.க. அரசு அரசியலமைப்புச் சட்டத்தையும் அதன் மக்களாட்சி அடித்தளத்தையும் களங்கப்படுத்த முடிவெடுத்து விட்டது.

வாக்குத் திருட்டு அம்பலப்படுத்தப்பட்ட பிறகு, ஒன்றிய பா.ஜ.க. அரசு அமைத்துள்ள ஆட்சியே கேள்விக்குள்ளாகியுள்ளது. தற்போதைய பா.ஜ.க. அரசு சட்டப்பூர்வமானதா என்பதே ஐயமாக உள்ளது. தில்லுமுல்லுகளின் மூலம் மக்களின் தீர்ப்பைக் களவாடியுள்ள பா.ஜ.க., தற்போது அதில் இருந்து மக்களின் கவனத்தை எப்படியாவது திசைதிருப்ப முயற்சி செய்கிறது. அதற்காகத்தான், இந்த அரசியலமைப்பு (130வது திருத்தம்) சட்ட முன்வரைவு, 2025ஐக் கொண்டு வந்துள்ளது.

இந்தச் சட்டமுன்வரைவின் நோக்கம் மிகத் தெளிவானது. பல்வேறு மாநிலங்களில் ஆட்சியில் உள்ள தனது அரசியல் எதிரிகளின் மீது பொய் வழக்குகளைப் புனைந்து, எந்த விசாரணையும் தீர்ப்பும் இன்றியே, 30 நாட்கள் கைது செய்யப்பட்டு இருந்தாலே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரைப் பதவிநீக்கம் செய்யலாம் எனும் சட்டப்பிரிவுகளின்கீழ், அவர்களை ஆட்சியில் இருந்து பா.ஜ.க. அகற்றவே இது வழி செய்கிறது.

குற்றம் என்பது தீர விசாரித்த பிறகே முடிவாகும், வெறுமனே வழக்கு பதிவதால் முடிவாகாது என்பதால், அரசியலமைப்புக்குப் புறம்பான இந்தச் சட்டத்திருத்தம் நிச்சயமாக நீதிமன்றங்களால் இரத்து செய்யப்படும்.

மேலும், பல மாநிலங்களிலும் முதலமைச்சர்களாக அமைச்சர்களாக இருக்கும் தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சியில் உள்ள மாநிலக் கட்சித் தலைவர்களை, "ஒழுங்காக எங்களுடன் இருங்கள், இல்லையென்றால்..." என்று மிரட்டுவதற்கான தீய நோக்கமும் இதில் உள்ளது.

எந்தச் சர்வாதிகாரியும் முதலில் செய்வது, தனது எதிராளிகளைக் கைது செய்யவும் பதவிநீக்கவுமான அதிகாரத்தைத் தனக்குத் தானே வழங்கிக் கொள்வதுதான். அதைத்தான் இந்தச் சட்டத்திருத்தமும் செய்ய முயல்கிறது.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது கண்டன அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

**பொதுவாழ்வுக்கு வந்ததற்குப் பிறகு**

# அப்பா கண்டிப்பவராகவும் - அம்மா அன்பு காட்டி அரவணைப்பவராகவும் என்னை வழிநடத்துகிறார்கள் !

## முதல்வர் மு.க.ஸ்டாலின் - திருமதி துர்கா ஸ்டாலின் 50வது திருமண நாளையொட்டி துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் நெகிழ்ச்சி!

**சென்னை, ஆக.21-**

**பொதுவாழ்வுக்கு வந்ததற்குப் பிறகு அப்பா கண்டிப்பவராகவும், அம்மா அன்பு காட்டி அரவணைப்பவராகவும் என்னை வழிநடத்துகிறார்கள் என்று துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இதுகுறித்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில்வெளியிட்டுள்ளவாழ்த்துச்செய்திவருமாறு:

அம்மாவும் அப்பாவும் இல்வாழ்வில் இன்று பொன்விழா காண்கிறார்கள்!

வாழ்வின் ஏற்றத்தாழ்வுகள் சுகதுக்கங்கள் எல்லாவற்றையும் இணைந்தே எதிர்கொண்டு 50 ஆண்டுகளை நிறைவு செய்கிறார்கள்.



மணமான சில மாதங்களிலேயே மிசா சிறைவாசம் இடைவெளியில்லா சுற்றுப் பயணங்கள் கடும் அரசியல் சூழல்கள் தொடர் மக்கள் பணி என எல்லாவற்றிலும் அப்பாவுக்கு பெருந்துணையாக இருந்து வருகிறார் அம்மா!

அம்மாவின் உணர்வுகள் நம்பிக்கைகளுக்கு மதிப்பளிக்கும் குடும்பத்தலை வராக அவருக்கு பக்கபலமாக திகழ்கிறார் அப்பா!

பொதுவாழ்வுக்கு நான் வரும் வரை, அப்பாவுக்கு செல்லப்பிள்ளை அம்மா என்றால் கண்டிப்பு.

இப்போது, அப்பா கண்டிப்பவராகவும் அம்மா அன்பு காட்டி அரவணைப்பவராகவும் பொதுவாழ்வில் என்னை வழிநடத்துகிறார்கள்!

அம்மா, அப்பா இருவரும் இன்று போல் என்றும் மகிழ்ந்திருக்க என் அன்பு வாழ்த்துகள் முத்தங்கள்!

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

---

**ரூ.66.78 கோடியில் மேற்கொள்ளப்பட்டுள்ள**

# செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையப் பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

*சென்னை, ஆக.21-*

*நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அவர்கள் 20.08.2025 அன்று ரூ.66.78 கோடி மதிப்பீட்டில் செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூவிருந்தவல்லி புறவழிச் சாலை சந்திப்பு வழியாக கோயம்பேடு வரையிலும் மேற்கொள்ளப்பட்டுள்ள இரண்டாவது பிரதான குடிநீர் குழாய் பரிசோதனை ஓட்டத்தினை ஆய்வு செய்தார்.*

*கிருஷ்ணா குடிநீர் வழங்கல் திட்டத்தின்கீழ் பெறப்பட்ட தண்ணீரை சுத்திகரிப்பதற்காக சென்னைக்கு அருகிலுள்ள செம்பரம்பாக்கத்தில் ரூ.296 கோடி மதிப்பீட்டில் நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் நீர் சுத்திகரிக்கும் நிலையம் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை கொண்டு செல்லும் குழாய்கள் அமைக்கும் பணிகள் நிறைவேற்ற ப்பட்டு 19.07.2007 அன்று அன்றைய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் கலைஞர் மு.கருணாநிதி அவர்களால் இந்நிலையத்தின் செயல்பாடுகள் தொடங்கி வைக்கப்பட்டது. இந்நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 265 மில்லியன் லிட்டர் குடிநீர் சென்னை மாநகர பகுதிகள் மற்றும் தாம்பரம் மாநகர பகுதிகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது.*

**தேனாம்பேட்டை, அண்ணா நகர் உள்ளிட்ட பகுதிகள் பயன்பெறும்!**

*பெருநகர சென்னை வளர்ச்சிக்கேற்ப பொது மக்களின் குடிநீர் தேவையை பூர்த்தி செய்யும் பொருட்டு செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து முழு கொள்ளளவான 530 மில்லியன் லிட்டர் குடிநீரை வழங்குவதற்காக ரூ.66.78 கோடி மதிப்பீட்டில் செம்பரம்பாக்கம் நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பூவிருந்த வல்லி புறவழிச் சாலை சந்திப்பு வழியாக கோயம்பேடு வரை இரண்டாவது பிரதான குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டது.*

*அதனடிப்படையில், செம்பரம்பாக்கம் குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் சென்னை மாநகருக்கு கொண்டு செல்வதற்காக பிரதான குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு, முதல் பகுதி செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து போரூர் வரை 11.7 கி.மீ. நீளத்திற்கும், பூவிருந்தவல்லி புறவழிச்சாலை சந்திப்பிலிருந்து கோயம்பேடு வரை 9.2 கி.மீ. நீளத்திற்கும் இரண்டாவது பிரதான குடிநீர் குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் கூடுதலாக 265 மில்லியன் லிட்டர் குடிநீர் தினசரி வழங்கப்படுவதால். செம்பரம்பாக்கம் சுத்திகரிப்பு நிலையத்தின் முழு அளவான நாளொன்றுக்கு 530 மில்லியன் லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் விநியோகிக்கப்படும். இதன் மூலம் அம்பத்தூர், அண்ணா நகர், தேனாம்பேட்டை, கோடம்பாக்கம், வளசரவாக்கம், ஆலந்தூர், அடையார் மண்டலங்கள், தாம்பரம் மாநகராட்சி, குன்றத்தூர் மற்றும் திருபெரும்புதூர் நகராட்சிகளில் உள்ள பொது மக்கள் பயன் பெறுவர்.*

*இவ்வாய்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, ஆவடி மாநகராட்சி மேயர் ஜி.உதயகுமார், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், சென்னை குடிநீர் வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி. வினய், திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், சென்னை குடிநீர் வாரிய செயல் இயக்குநர் கௌரவ் குமார், ஆவடி மாநகராட்சி ஆணையர் திருமதி.ரா. சரண்யா, சென்னை குடிநீர் வாரியத்தின் பொறியியல் இயக்குநர்(பொ) திருமதி. டி.மைதிலி, தலைமைப் பொறியாளர் திருமதி.ஓ.பர்வீஸ், மேற்பார்வை பொறியாளர் வி.சிவக்குமார் மற்றும் உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.*



நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே. என். நேரு அவர்கள், நேற்று (20.8.2025) பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில், சைதாப்பேட்டை தாதண்டர் நகர் அருகில் உள்ள மாம்பலம் கால்வாயில் நீர்நிலைகளைத் தூர்வாரும் பணிக்காக ரூபாய் 7.43 கோடி மதிப்பீட்டில் மூன்று புதிய ஆம்பிபியஸ் எஸ்கவேட்டர் இயந்திரங்களை பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், துணை மேயர் மு. மகேஷ் குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், துணை ஆணையர் (பணிகள்) வி. சிவகிருஷ்ணமூர்த்தி, தெற்கு வட்டார துணை ஆணையர் அஃதாப் ரசூல், மண்டலக் குழுத் தலைவர் ஆர். துரைராஜ் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.